




# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

தலைமைக் கழகம்

எண் : 15, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014

தொலைப்பேசி : 044 - 28481235

டிடிவி தினகரன்

பொதுச்செயலாளர்


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி : 31.12.2024

## ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்

**மலரும் புத்தாண்டை மகிழ்ச்சியோடும், உற்சாகத்தோடும் கொண்டாடி வரவேற்கும் மக்கள் அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.**

நாட்டு மக்கள் அனைவரின் உள்ளங்களிலும், எண்ணங்களிலும் புதிய நம்பிக்கையையும், புத்துணர்ச்சியையும் விதைத்திடும் வகையில் பிறக்கும் இப்புத்தாண்டு, மக்களை அனைத்து வழிகளிலும் துன்பத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்கும் தீமைகளை விரட்டி, புதிய வெளிச்சத்தை பாய்ச்சும் ஆண்டாக அமைய வேண்டும் என எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**உதயமாகும் புத்தாண்டு நிறைவான வளத்தையும், குறையாத மகிழ்ச்சியையும் ஏற்படுத்தும் ஆண்டாக மட்டுமின்றி மனிதநேயமும், மதநல்லிணக்கமும் தழைத்தோங்கும் ஆண்டாகவும் அமையட்டும்** எனக்கூறி மக்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது புத்தாண்டு நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

**டிடிவி தினகரன்**